# Winmeen - Group 4 VAO General Tamil Model Test 18

1) எந்த நாட்டின் சாலை ஒன்றுக்கு வன்னி வீதி என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது?

A) அமெரிக்கா B) ஆஸ்திரேலியா

C) கனடா D) இத்தாலி

2) தமிழர் பாரம்பரிய நாள் எது?

A) ஜனவரி 14 B) ஜனவரி 16

C) ஜனவரி 12 D) ஜனவரி 15

3) வம்ச விருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசின் முதல் பரிசினைப்பெற்றவர்?

A) வில்வரத்தினம் B) அ.முத்து லிங்கம்

C) இந்திரன் D) முத்துக்குமாரசாமி

4) தமிழ் இலக்கிய வரலாற்றில் புலமைக்கதிரவன் என்று அறிஞர்களால் போற்றப்படுபவர்?

A) மீனாட்சிசுந்தரனார் B) சுப்பிரமணிய தேசிகர்

C) சென்னைத்தாண்டவராயர் D) திருத்தணிகை விசாக பெருமாள்

5) ஆங்கிலச்சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல்லைப் பொருத்துக.

a ) aesthetic - 1) புத்தக மதிப்புரை

b ) book review - 2) அழகியல்

c ) migration - 3) கலை விமர்சகர்

d ) art critic - 4) புலம்பெயர்தல்

a) b) c) d)

A) 2) 1) 4) 3)

B) 2) 4) 3) 1)

C) 1) 2) 3) 4)

D) 3) 2) 4) 1)

6) உழவு உலகிற்கு அச்சாணி என்று கூறியவர் யார்?

A) இளங்கோவடிகள் B) பாரதியார்

C) நம்மாழ்வார் D) திருவள்ளுவர்

7) ஒற்றை வைக்கோல் புரட்சி என்ற நூலை எழுதிய மசானபு ஃபுகோகோ எந்த நாட்டை சேர்ந்த அறிஞர்?

A) அமெரிக்கா B) ஜெர்மனி

C) ஜப்பான் D) பிரான்சு

8) நம்மாழ்வார் கூறிய விவசாய மந்திரங்கள் எத்தனை?

A) ஆறு B) ஏழு

C) ஐந்து D) எட்டு

9) எழுத்தாளர் அரவிந்தனின் புனைப்பெயர் என்ன?

A) ஜெய மோகன் B) மௌனி

C) அழகிய பெரியவன் D) பெரியவன் கவிராயர்

10) "குலமின் னார்மழை பெய்யெனப் பெய்யும்

குடங்கை ஏற்பவர் செய்யெனச் செய்யும்" என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்?

A) திருமலை முருகன் பள்ளு B) பெத்தலகேம் குறவஞ்சி

C) இராவண காவியம் D) காவடிச்சிந்து

11) இடங்கணி என்பதன் பொருள்?

A) சங்கிலி B) உலகம்

C) முத்து D) மேகம்

12) அகிற்புகை என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு தருக.

A) ஆறாம் வேற்றுமைத்தொகை B) ஏழாம் வேற்றுமைத்தொகை

C) இரண்டாம் வேற்றுமைத்தொகை D) நான்காம் வேற்றுமைத்தொகை

13) திருமலை முருகன் பள்ளு கூறும் நெல்வகைகள் எத்தனை?

A) 18 B) 19

C) 20 D) 17

14) ஐங்குறுநூற்றின் பாவகை?

A) ஆசிரியப்பா B) விருத்தப்பா

C) கலிப்பா D) அகவற்பா

15) "காழ்வரை நில்லா கடுங்களிற்று ஒருத்தல்

யாழ்வரை தங்கி யாங்கு" என்ற அடிகள் இடம்பெற்ற நூல்?

A) திருக்குறள் B) நற்றிணை

C) முல்லைப்பாட்டு D) கலித்தொகை

16) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தச்சொல்லைத் தேர்க.

A) கப்பம் B) அச்சம்

C) தேர்தல் D) மொத்தம்

17) தமிழிசை இயக்கத்தின் தந்தை எனப்போற்றப்படுபவர் யார்?

A) தியாகராய பாகவதர் B) ஆபிரகாம் பண்டிதர்

C) கதிரேசஞ்செட்டியார் D) முத்துக்குமாரசாமி

18) 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று கூறும் நூல்?

A) சிலப்பதிகாரம் B) பெரிய புராணம்

C) பெரிய திருமொழி D) தொல்காப்பியம்

19) குறுந்தொகையில் உள்ள அகத்திணை சார்ந்த பாடல்கள் மொத்தம் எத்தனை?

A) 100 B) 400

C) 401 D) 402

20) சிசு செல்லப்பா அவர்களின் எந்தப்படைப்புக்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி பரிசு கிடைத்தது?

A) ஜீவனாம்சம் B) சுதந்திர தாகம்

C) வாடிவாசல் D) எழுத்து

21) 'தமிழ்ப்பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படுபவர் யார்?

A) வள்ளலார் B) பூரணலிங்கனார்

C) உ.வே.சா D) சி.வை.தாமோதரனார்

22) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு.- என்ற குறளில் பயின்று வரும் அணி எது?

A) உருவக அணி B) வேற்றுமை அணி

C) எடுத்துக்காட்டு உவமையணி D) உவமையணி

23) தென்னிந்திய மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை என்ற கருத்தைக் கொண்டவர்கள்?

A) மாக்ஸ்முல்லர் B) ஹோக்கன்

C) A) மற்றும் B) D) இருவரும் இல்லை

24) தவறாக பொருந்தியுள்ள இணையைத் தேர்க.

A) மூணு - மலையாளம் B) மூரு - தெலுங்கு

C) மூஜி - துளு D) கெண் - பர்ஜி

25) எம்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பாலறி கிளவிகள் இல்லை?

A) கன்னடம் B) தெலுங்கு

C) மலையாளம் D) துளு

26) தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை?

A) கண்ணி B) புலன்

C) பள்ளு D) சிந்து

27) தெள்ளமுது - இலக்கணக்குறிப்பு தருக

. A) பண்புத்தொகை B) பெயரடை

C) வினைத்தொகை D) பெயரெச்சம்

28) கவிதா உரை படித்தாள் - என்பது எவ்வகைத்தொடர்?

A) செய்வினைத்தொடர் B) செயப்பாட்டு வினைத்தொடர்

C) தன்வினைத்தொடர் D) பிறவினைத்தொடர்

29) "உணவாய் உளதமிழே! ஓர்ந்தேன்; நீ பாட்டுக்

கணவாய் வழிவரும் காற்று! " என்ற பாடல் வரிகளை இயற்றியவர்?

A) வைரமுத்து B) வாலி

C) முத்துக்குமார் D) யுகபாரதி

30) 'சனி நீராடு' என்பது யாருடைய வாக்கு?

A) ஆண்டாள் B) ஔவை

C) இளங்கோவடிகள் D) மாணிக்கவாசகர்

31) உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை?

A) குண்டம் B) கூவல்

C) சிறை D) உறைக்கிணறு

32) சொல்லுக்கேற்ற பொருளைப் பொருத்துக.

a) பணிலம் - 1) சங்கு

b) தரளம் - 2) பக்கம்

c) மா - 3) முத்து

d) மாடு - 4) வண்டு

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 1) | 2) | 3) | 4) |
| B) | 2) | 1) | 4) | 3) |
| C) | 1) | 3) | 4) | 2) |
| D) | 3) | 4) | 1) | 2) |

33) திருத்தொண்டர் திருவந்தாதியை இயற்றியவர்?

A) நம்பியாண்டார் நம்பி B) சுந்தரர்

C) சேக்கிழார் D) அப்பர்

34) சோழ அரசன் 2-ஆம் குலோத்துங்கனின் முதலமைச்சர்?

A) ஒட்டக்கூத்தர் B) புகழேந்தி புலவர்

C) சேக்கிழார் D) கம்பர்

35) "உண்டி முதற்றே உணவின் பிண்டம்" என்று கூறும் நூல் எது?

A) புறநானூறு B) அகநானூறு

C) நற்றிணை D) முல்லைப்பாட்டு

36) அடுபோர் இலக்கணக்குறிப்பு தருக.

A) பண்புத்தொகை B) வினைத்தொகை

C) அன்மொழித்தொகை D) தொழிற்பெயர்

37) தண்ணீர் தண்ணீர் என்ற நூலை இயற்றியவர் யார்?

A) வைரமுத்து B) கோமல் சுவாமிநாதன்

C) வெ.இறையன்பு D) மா.கிருஷ்ணன்

38) இவற்றுள் எதனை உற்பத்தி செய்ய அதிகளவு நீர் தேவைப்படுகிறது?

A) ஆப்பிள் B) சர்க்கரை

C) காப்பிக்கொட்டை D) அரிசி

39) "எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்" இப்பாடல் வரிகள் இடம் பெற்ற நூல்?

A) புறநானூறு B) கலித்தொகை

C) முல்லைப்பாட்டு D) குறுந்தொகை

40) உரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்த இடம்?

A) அரிக்கமேடு B) கோவை

C) ஆதிச்சநல்லூர் D) பல்லாவரம்

41) வல்லினம் மிகும் இடங்களைப் பற்றிய கூற்றுகளில் தவறானவற்றை தேர்க.

A) ஓரெழுத்து ஒருமொழிக்குப் பின் வல்லினம் மிகும்.

B) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

C) ஏழாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகும்

D) திசைப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்

42) தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் என்ற நூலினை எழுதியவர்?

A) மா.இராசமாணிக்கனார் B) கா.ராஜன்

C) அ.தட்சிணாமூர்த்தி D) க.ரத்னம்

43) பொருளுரை என்றழைக்கப்படும் நூல் எது?

A) திருக்குறள் B) மூதுரை

C) நாலடியார் D) தொல்காப்பியம்

44) "ஏவுகணையிலும் தமிழை எழுதி

எல்லாக் கோளுக்கும் அனுப்புங்கள்" என்ற கவிதை வரிகளை எழுதியவர்?

A) வைரமுத்து B) வாலி

C) யுக பாரதி D) தமிழொளி

45) தமது அறிவியல் அனுபவங்களை கையருகே நிலா என்னும் நூல் வடிவில் வெளியிட்டவர்?

A) அருணன் சுப்பையா B) டாக்டர் அப்துல்கலாம்

C) வளர்மதி D) மயில்சாமி அண்ணாதுரை

46) தமிழ்க்கும்மி என்ற தலைப்பில் அமைந்த பாடல் பெருஞ்சித்திரனார் இயற்றிய எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A) கொய்யாக்கனி B) பாவியக்கொத்து

C) நூறாசிரியம் D) கனிச்சாறு

47) “தேன் தோன்றியது போல மக்கள் நாவில்

செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி! “ என்று கூறியவர்?

A) வாணிதாசன் B) பாரதிதாசன்

C) கவிமணி D) முடியரசன்

48) "தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" என்ற வரிகள் இடம்பெற்ற நூல்?

A) சிலப்பதிகாரம் B) அப்பர் தேவாரம்

C) தொல்காப்பியம் D) மணிமேகலை

49) பொருத்துக.

a) நெல் - 1) தாள்

b) நாணல் - 2) புல்

c) கோரை - 3) கூந்தல்

d) கமுகு - 4) தோகை

| | a) | b) | c) | d) |
|---|---|---|---|---|
| A) | 1) | 4) | 2) | 3) |

B) 2) 1) 4) 3)
C) 1) 3) 4) 2)
D) 3) 4) 1) 2)

50) "நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு" என்று கூறும் நூல்?

A) பதிற்றுப்பத்து B) நற்றிணை
C) கார்நாற்பது D) தொல்காப்பியம்

51) தாயுமானவர் வாழ்ந்த காலம்?

A) பதினெட்டாம் நூற்றாண்டு B) பதினேழாம் நூற்றாண்டு
C) பதினாறாம் நூற்றாண்டு D) பதினைந்தாம் நூற்றாண்டு

52) "வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் விளங்குகிறார்" என்று கூறியவர் யார்?

A) மீனாட்சிசுந்தரனார் B) ரா.பி.சேதுப்பிள்ளை
C) அறிஞர் அண்ணா D) ஆறுமுக நாவலர்

53) தாயுமானவரின் பராபரக்கண்ணியைப்போன்று ஓசைநயமிக்க இசுலாமியப்பாடல்களை இயற்றியவர்?

A) சுல்தான் அப்துல் காதிறு B) உமறுப்புலவர்
C) வீரமாமுனிவர் D) அப்துல்ரகுமான்

54) ஜி.யு.போப் அவருடைய எத்தனையாவது வயதில் சமயப்பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டார்?

A) 19 B) 18 C) 17 D) 16

55) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

A) குற்றியலுகரத்திற்கு அரை மாத்திரை

B) ஈற்று அயலெழுத்தாகத் தனி நெடில், ஆய்தம், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும்.

C) நெடில் தொடர்க்குற்றியலுகரம் மட்டுமே எழுத்துக்களைப் பெற்று வரும்.

D) மேற்கண்ட அனைத்தும் சரி

56) நட்புக்கு சிறந்த நிலை எது?

A) அழிவிலிருந்து மீட்டல் B) துன்பத்திலிருந்து காத்தல்
C) உள்ளம் மகிழும்படி அன்புடன் இருத்தல் D) இயலும்பொழுதெல்லாம் உதவி செய்தல்

57) முதல் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரையிலான பால பாடங்களை தமிழில் எழுதி அச்சிட்டவர்?

A) ஆறுமுக நாவலர் B) குணங்குடி மஸ்தான்
C) மீனாட்சிசுந்தரனார் D) உ.வே.சா

58) பந்தயம் என்ற பிறமொழிச் சொல்லுக்கான தமிழ்ச்சொல்லைத் தேர்க.

A) போட்டி B) பிணையம்
C) பணையம் C) ஒட்டம்

59) ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

A) பாலும் தேனும் இனித்தது B) பாலும் தேனும் இனித்தனர்
C) பாலும் தேனும் இனித்தன D) பாலும் தேனும் புளித்தது

60) மே என்ற ஓரெழுத்து ஒருமொழியின் பொருளைக்கண்டறிக.

A) விரும்புதல் B) காத்தல்

C) இருத்தல் D) உதவி செய்தல்

61) இயற்றினான் என்ற சொல்லின் வேர்ச்சொல்லை தேர்க.

A) இயல் B) இயற்று

C) இயல்பு D) இயற்றுதல்

62) பார்த்தல் என்ற தொழிற்பெயரின் வியங்கோள் வினைமுற்று வடிவம் எது?

A) பார் B) பார்க்க வேண்டும்

C) பார்த்திலன் D) பார்த்து

63)முத்தொள்ளாயிரம் என்ற நூலின் பாவகை?

A) கலிப்பா B) வஞ்சிப்பா

C) ஆசிரியப்பா D) வெண்பா

64) நந்திக்கலம்பகத்தின் ஆசிரியர்?

A) குமர குருபரர் B) பரஞ்சோதி முனிவர்

C) புகழேந்தி புலவர் D) ஆசிரியர் பெயர் தெரியவில்லை

65) மூவர் உலாவை இயற்றியவர்?

A) ஜெயங்கொண்டார் B) ஒட்டக்கூத்தர்

C) சேக்கிழார் D) கம்பர்

66) மருத நில நூலாக கருதப்படும் சிற்றிலக்கியம் எது?

A) குறவஞ்சி B) பள்ளு

C) இராவண காவியம் D) தூது

67) திவ்விய கவி என்ற சிறப்பு பெயர் கொண்டவர்?

A) பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் B) வேதநாயக சாஸ்திரியார்

C) இராமானுசக்கவிராயர் D) பலபட்டடை சொக்கநாதப்பிள்ளை

68) மனோன்மணியம் என்ற நூலின் பாவகை?

A) விருத்தப்பா B) வெண்பா

C) ஆசிரியப்பா D) வஞ்சிப்பா

69) காளமேகப்புலவர் வைணவத்திலிருந்து எந்த சமயத்திற்கு மாறினார்?

A) சைவம் B) சமணம்

C) பௌத்தம் D) கிருத்துவம்

70) தாண்டகம் என்னும் செய்யுள் வகையில் சிறந்த பாடல்கள் இயற்றியவர்?

A) சுந்தரர் B) மாணிக்க வாசகர்

C) தாயுமானவர் D) வாகீசர்

71) நம்பி ஆரூரர் என்ற இயற்பெயர் கொண்டவர்?

A) திருஞானசம்மந்தர் B) திருநாவுக்கரசர்

C) சேக்கிழார் D) சுந்தரர்

72) ஆண்டாள் வாழ்ந்த காலம்?

A) ஒன்பதாம் நூற்றாண்டு B) பத்தாம் நூற்றாண்டு

C) எட்டாம் நூற்றாண்டு D) ஏழாம் நூற்றாண்டு

73) தமிழகத்தின் சிங்கம் அழைக்கப்படுபவர்?

A) காமராசர் B) முத்துராமலிங்கர்

C) வீரபாண்டிய கட்டபொம்மன் D) இராஜா தேசிங்கு

74) "காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்" என்று பாடியவர்?

A) மருதகாசி B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்

C) கவிமணி D) உடுமலை நாராயணகவி

75) நூறு கோவில்களுக்குச் சென்று கண்ட சிற்பங்களின் பேரழகைப்பார்த்து மகிழ்ந்த அனுபவத்தை தரும் ஒரே கோவில் எது?

A) மாமல்லபுரம் கடற்கரை கோவில் B) ஐராவதீஸ்வரர் கோவில்

C) காஞ்சி வைகுந்தபெருமாள் கோவில் D) தஞ்சை பெரிய கோவில்

76) மறுபிறவிக்கும் இப்பிறவிக்கும் இன்பம் தரும் செயல் எது?

A) பொறுத்தல் B) இன்சொல் பேசுதல்

C) நன்றி மறவாமை D) பிறர்க்கு உதவுதல்

77) கால்டுவெல் தமிழகத்தில் வாழ்ந்த இடம்?

A) சாயர்புரம் B) சாந்தோம்

C) இடையன்குடி D) வேலூர்

78) "அதனால் யானுயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே" என்று பாடியவர்?

A) ஔவையார் B) மோசிகீரனார்

C) கண்ணகனார் D) மிளைகிழான் நல்வேட்டனார்

79) முதுமொழிக்காஞ்சியில் உள்ள மொத்த அதிகாரங்கள் எத்தனை?

A) 100 B) 10

C) 50 D) 80

80) சுவிட்சர்லாந்தைச்சேர்ந்த பதினெட்டாம் நூற்றாண்டின் இணையற்ற கணிதமேதை?

A) லிட்டில்வுட் B) ஜாகோபி

C) ஆய்லர் D) ஈ.டி.பெல்

81) "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்ற அடிகள் இடம்பெற்ற நூல்?

A) பெரும்பாணாற்றுப்படை B) சிறுபாணாற்றுப்படை

C) திருமுருகாற்றுப்படை D) முல்லைப்பாட்டு

82) மருதகாசி இயற்றிய ஏர்முனை பாடல் எந்த தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது?

A) சமூகம் B) சமுதாயம்

C) விவசாயம் D) என் கடன்

83) திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்கு தொண்டராய் இருந்தவர்?

A) ஈசான தேசிகர் B) பலபட்டடை சொக்கநாதப்பிள்ளை

C) அழகியசொக்கநாத புலவர் D) புலவர் குழந்தை

84) பாவு நூல், ஊடைநூல் இணைந்து உருவாகும் ஆடை எது?

A) வேட்டி B) துண்டு

C) கலிங்கம் D) களிம்பு

85) இயற்கை வேளாண்மைக்கூறுகள் எத்தனை வகைப்படும்?

A) 6 B) 4

C) 5 D) 8

86) சோழ அரசக்குலத்தில் பிறந்தவர் யார்?

A) சேக்கிழார் B) திருத்தக்கதேவர்

C) நக்கீரர் D) மோசிகீரனார்

87) சேரர்கால ஓவியங்கள் கிடைத்துள்ள இடம்?

A) சித்தன்னவாசல் B) திருநந்திக்கரை

C) புதுக்கோட்டை D) நந்திக்கிராமம்

88) தம் எழுபதாண்டு நினைவாக நான் கண்ட பாரதம் என்னும் அரிய நூலை எழுதியவர்?

A)அஞ்சலையம்மாள் B) அசலாம்பிகை அம்மையார்

C) அம்புஜத்தம்மாள் D) ருக்குமணிலட்சுமிபதி

89) கட்டியங்காரன் உரையாடல்களோடு முழுவதும் பாடல்களாக அமைந்தது?

A) டம்பாச்சாரி விலாசம் B) கதரின் வெற்றி

C) இராம நாடகம் D) மத்தவிலாசம்

90) பொங்கல் இலக்கணக்குறிப்பு தருக.

A) வியங்கோள் வினை முற்று B) தொழிலாகுபெயர்

C) தொழிற்பெயர் D) பொருளாகுபெயர்

91) பாரதிதாசன் தலைமுறைக்கவிஞருள் மூத்தவர்?

A) முடியரசன் B) சுரதா

C) தாராபாரதி D) சாலை இளந்திரையன்

92) "வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்தவற்றுள்

பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வினிலே" என்று பாடியவர்?

A) கபிலர் B) பாரதிதாசன்

C) திரு.வி.க D) மீனாட்சிசுந்தரனார்

93) "கார்குலாம் நிறத்தான் கூறக் காதலன் உணர்த்து வான்இப்" இவ்வடிகளில் கார்குலாம் நிறத்தான் என்று குறிப்பிடப்படுபவர்?

A) குகன் B) இராமன்

C) இலக்குவன் D) பரதன்

94) அம்பேத்கர் செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வியை எவ்வாறு கூறுகிறார்?

A) மிருகத்தனம் B) களர்நிலம்

C) சுரண்டல் D) வெறுமை

95) தொடக்கவுரைக்குப்பிறகு பொருளை விரித்துப் பேசும்முறை?

A) எடுத்தல் B) தொடுத்தல்

C) விளக்கம் D) முடித்தல்

96) "ஆடுவாயா?" என்று வினவியபோது 'பாடுவேன்' எனக்கூறுவது?

A) உற்றதுரைத்தல் B) இனவிடை

C) மறை விடை D) உறுவது கூறல்

97) வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை மீட்டல் எவ்வகைத்திணை?

A) கரந்தை B) உழிஞை

C) நொச்சி D) வாகை

98) "இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் - வழி

என்னென்ன வாகுமோ ஓரிரவில்" என்ற கவிதை வரிகளை எழுதியவர்?

A) தாரா பாரதி B) பிரமிள்

C) கலாப்ரியா D) சாலை இளந்திரையன்

99) “வாழ்க சந்தேகங்கள்” என்ற நூலை எழுதியவர்?

A) சிசு செல்லப்பா B) சிற்பி

C) மு.மேத்தா D) பசுவய்யா

100) மு.வ எழுதிய கடித இலக்கிய நூல்கள் எத்தனை?

A) நான்கு B) மூன்று

C) இரண்டு D) ஐந்து

winmeen.com

# Group 4 VAO General Tamil Model Test 18 – Answer Key

| | | | | |
|---|---|---|---|---|
| 1)C | 2)A | 3)B | 4)A | 5)A |
| 6)D | 7)C | 8)C | 9)C | 10)A |
| 11)A | 12)A | 13)B | 14)D | 15)D |
| 16)C | 17)B | 18)D | 19)C | 20)B |
| 21)D | 22)B | 23)C | 24)B | 25)C |
| 26)A | 27)A | 28)A | 29)B | 30)B |
| 31)B | 32)C | 33)A | 34)C | 35)A |
| 36)B | 37)B | 38)C | 39)B | 40)A |
| 41)C | 42)A | 43)A | 44)A | 45)D |
| 46)D | 47)A | 48)C | 49)A | 50)A |
| 51)A | 52)B | 53)A | 54)A | 55)D |
| 56)D | 57)A | 58)C | 59)C | 60)A |
| 61)B | 62)B | 63)D | 64)D | 65)B |
| 66)B | 67)A | 68)C | 69)A | 70)D |
| 71)D | 72)A | 73)B | 74)B | 75)B |
| 76)B | 77)C | 78)B | 79)B | 80)C |
| 81)B | 82)A | 83)A | 84)C | 85)A |
| 86)B | 87)B | 88)C | 89)C | 90)B |
| 91)A | 92)B | 93)B | 94)B | 95)B |
| 96)B | 97)A | 98)D | 99)D | 100)A |

winmeen.com